www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

**-செங்கை ஆழியான்-**

28

இக்கோயில் ஆகம விதிகளுக்கு இணங்க அமைக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. இக்கோயில் விதானங்கள் செப்புத் தகடுகளில் வரையப்பட்டிருந்தன. சிலா விக்கிரகங்கள் இக்கோயிலில் பிரதிட்டை செய்யப்பட்டிருந்தன. இக்கோயில் மிகப் பெரியதாக தென்னிந்தியக் கோயில்களை ஒத்ததாக இருந்திருக்கவேண்டும். 'யாழ்ப்பாணத்திலேயே பெரிய கோயிலாக இதுவே இருந்தது என்பதை குவெறோஸ் சுவாமிகளின் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இக்கோயிலைச் சுற்றி நெடு மதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. இன்றும் இந்தக் கோயில் மதிலின் ஒரு பகுதியை சங்கிலித்தோப்பில் யமுனாரி என்ற பகர வடிவ ஏரிக்குக் கிழக்குப் புறத்தில் காண முடிகின்றது. நான்கு அடிகள் அகலமான செங்கற்சுவரின் அத்திவாரத்தை யமுனாரிக்குச் செல்கின்ற ஒழுங்கை முகப்பிலும் காணலாம். நல்லூர்க் கந்தசுவாமி கோவில், உயர்ந்த மதில்களுள் அமைந்திருந்தமையால் தான், பின்னர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த பிலிப் ஒலிவேரா என்ற போர்த்துக்கேயத் தளபதி ஒரு கட்டத்தில் இக்கோயிலுனுள் தனது வீரர்களுடன் புகுந்து, இதனை ஒரு கோட்டையாகப் பயன்படுத்தி இருக்கிறான். நல்லூரில் மீண்டும் முத்திரைச் சந்தி கிறிஸ்தவ தேவாலயம் இன்று அமைந்துள்ள தோட்டத்தில் கந்தனாலயம் கோபுர கலசங்களோடு அமைந்தது. இக்கோயிலிலிருந்த சிலா விக்கிரகங்கள் சிலவற்றை யாழ்ப்பாணத் தொல்பொருட் காட்சிச்சாலையில் இன்றும் காணலாம். இப்பெரிய ஆலயத்தை அமைத்தமையால் இவனது பெயர் இன்றும் கோவில் கட்டிடத்தில் 'சிறீ சங்கபோதி புவனேகவாகு' வென நினைவு கூரப்படுகின்றது.



சிறீ சங்கபோதி புவனேகவாகு, நல்லூரிலிருந்து உத்தரதேசத்தை பதினேழு வருடங்கள் ஆட்சி செய்தான். கி.பி.1467 ஆம் ஆண்டு அவன் தென்னிலங்கைக்கு திரும்பிச் செல்ல நேர்ந்தது. அவனுடைய வளர்ப்புத் தந்தை ஆறாம் பராக்கிரமபாகு இறந்து போக, அவனது பேரன் ஜெயவீரன் கோட்டைக்கு அரசனானான். அதனை விரும்பாத சிறிசங்கபோதி புவனேகவாகு, விஜயவாகு என்பவனை யாழ்ப்பாணத்தின் அரசனாக்கிவிட்டு கோட்டைக்கு மீண்டு ஜெயவீரனைக் கொன்றுவிட்டு அரசகட்டிலேறினான். தருணத்தை எதிர்பார்த்து திருக்கோவிலூரில் கரந்துறைந்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும் அவனது இரு புதல்வர்களும் சேனைகளுடன் வந்து விஜயபாகுவைக் கொன்று இழந்த இராச்சியத்தை மீட்டுக் கொண்டனர்.

கனகசூரிய சிங்கையாரியான் மீண்டும் இழந்த மணிமுடியைத் தரித்துக் கொண்டான். அவன் பின் அவனது மூத்த மகனான பரராசசேகரன் கி.பி.1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்ற சிம்மாசனப் பெயரோடு மன்னனானான். நல்லூரை மேலும் சிறப்புமிக்க நகராக்கியவன் சிங்கைப் பரராசசேகரன் ஆவான். கந்தசுவாமி கோவிலுக்கண்மையில் ஓர் ஏரி அமைப்பித்து, யமுனா நதியின் திவ்விய தீர்த்தத்தை காவடிகளிற் கொணர்வித்து, அவ்வேரிக்குள் பெய்வித்து அதனை (யமனா ஏரி) யமுனையோ எனப் பெயர் தந்து அழைத்தான். இந்த யமுனா ஏரி என்ற பகர வடிவ ஏரி இன்று அழியுந்தறுவாயிலுள்ளது.

### யோகியார்

கி.பி.1591 இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சா எனும் படைத்தலைவனை பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். போர்த்துக்கேயத் தளபதி யாழ்ப்பாண அரசினைப் பெரும்படையுடன் தாக்கினான். தமிழர் படையும் பறங்கியர் படையும் வீரமாகாளியம்மன் கோயிலுக்கும் கந்தசுவாமி கோயிலுக்கும் இடையிலுள்ள பெரும் வெளியில் அதாவது தற்போதைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலமைந்துள்ள இடத்தில் ஒன்றினையொன்று எதிர்கொண்டன. 'அரசனுடைய மகாவீரர்களைக் கொண்ட அத்துப்படை தங்கள் உயிரை வெறுத்துச் சத்துருக்களை எதிர்த்துப் பொருதினர். அக்கடும் போரிற் கலந்த தமிழரெல்லாரும் மாண்டனர். அவர்களை நடாத்திய யோகி ஒருவரும் கந்தசுவாமி கோயிற் பூசகரும் (பெரிய ஆலயத்துப் பிராமணரும்) மாண்டனர்.

அக்காலவேளையில் யாழ்ப்பாண மண்ணில் துறவிகள் நடமாடினர். தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாண இராச்சியமூடாக சிவனொளிபாத மலைக்கும் கதிர்காமத்திற்கும் தலயாத்திரையை யோகிகள் மேற்கொண்டிருந்தார்கள். யோகிகள் வடிவில் கண்டி மன்னனுக்குதவ போர் வீரர்கள் தென்னிந்தியாவிலிருந்து செல்வதாகப் போர்த்துக்கேயர் சந்தேகப்பட்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும் நல்லூரில் யோகியர் ஒருவர் வாழ்ந்துள்ளார் என்பதில் ஐயமில்லை. இவரது பெயர் சிக்கந்தர் என்பர். இவரை சைவமக்களும் அக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்த முஸ்லிம் மக்களும் ஆதரித்துப் போற்றினர். இந்த இரு மதத்தவர்களுக்குமுரிய அற நெறிகளை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தபடியால் தான் இரு மத மக்களும் அவரை வழிபட்டனர். புராதன நல்லூர்த் தேவாலயம் அமைந்திருந்த குருக்கள் வளவில் அந்த யோகியார் உலவினார். தன்னை நாடி வந்த மக்களுக்கு அறநெறி புகட்டினார். போர்த்துக்கேயருக்கும் தமிழ்ப்படை வீரர்களுக்கும் இடையில் குருக்கள் வளவில் நிகழ்ந்த யுத்தத்தில் அந்த யோகியார் உயிரிழக்க நேர்ந்தது. குருக்கள் வளவின் சுற்றாடலில் அக்காலவேளையில் முஸ்லிம்கள் வாழ்ந்தமையால் அவர்களால் நன்கு மதிக்கப்பட்ட அந்த யோகியாருக்கு ஒரு சமாதியைக் குருக்கள் வளவில் கட்டி வழிபாடியற்றி வருவராயினர். அக்காலகட்டத்தில் இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோவில் அமைந்துள்ள குருக்கள் வளவு என்ற விடத்தில் முஸ்லிம்கள் குடியேறியிருந்தார்கள் என அறியப்படுகிறது. 'அக்காலத்தில் கந்தாய்பு என்பவனால் முகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வம்சத்தவர்களான சில சோனகக்குடிகள் காயல்பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென்மிருசுவில் என்னும் ஊரில் குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாமில் என்னுமிடங்களில் சந்தைகளில் வியாபாரம் பண்ணிக்கொண்டு தாங்களிருந்ததென மிருசுவிலுக்கு உசனென்று பேருமிட்டனர். சில காலம் அவ்விடத்திலிருந்து அவ்விடம் வசதிப்படாததனால் அந்தச் சோனகக்குடிகள் அவ்விடத்தை விட்டு நல்லூரில்கந்தசுவாமி கோவில் இருந்த இடத்தில் குடியிருந்தார்கள் 'சோனகர் உசனினன்று அகன்று சோனகன் புலவில் சிறிது காலம் வைகி, அதுவும் வாய்ப்பாகாமையால் இப்போது நல்லூரில் கந்தசுவாமி கோவிலிருக்கும் இடத்திற்கு மேல்பாகத்தில் குடிகொண்டார்களன். அங்கே ஒரு பள்ளிவாசலுங் கட்டினார்கள். கோயில் அயலில் மேற்குத்திசையாக சில காலத்திற்கு முன் மசூதி யொன்றிருந்ததாகத் தெரிகின்றது. கி.பி.1560 ஆம் ஆண்டு



கொன்ஸ்தாந் தி டி பிறகன்ஸா யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தபோது பறங்கிகளுக்கு எதிராக 'தமிழர் படையிலுள்ள வடக்கரும், சோனகரும் போராடினர். கி.பி. 1591 இல் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்ட அந்திரபூர்த்தாடு மீண்டும் கலகம் விளைவிக்ககூடியவர்களென எண்ணமிட்டு எண்ணூறு வடக்கரையும் சில சோனகரையும் சிரச்சேதஞ் செய்துள்ளான். மேலும் கரையிறங்கிய பறங்கிப்படை, இவ்விடத்திற்கண்மையிலிருந்த சோனகரின் வர்த்தகச் சாலைகளைக் கண்டு அவைகளுட் புகுந்து 10000 கண்டி நெல்லையும் 400 கண்டி அரிசியையும் வாரிக்கொண்டு போயினர். இவற்றிலிருந்து நல்லூரில் சில சோனகக் குடிகள் வசித்து வந்தனர் எனத் துணியலாம்.

(தொடரும்)